சுருக்கம்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் – மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை – கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான தங்கும் இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் தூங்கும் அறைகள் கட்டுதல் – அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ2) துறை

அரசணை (நிலை) எண்.156

நாள்: 11.12.2014
ஜய கார்த்திகை 25,
திருவள்ளுவர் ஆண்டு, 2045
படிக்கப்பட்டது:-

தொழிலாளர் ஆணையர் கடிதம் எண்.W1/36151/2014, நாள் 26.08.2014 மற்றும் 17.09. 2014.

ஆணை:-

2014–2015ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரவு செலவு கூட்டத் தொடரில் 12.08.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் இதர அறிவிப்புகளுடன் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> "பொதுவாக, கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பவரால் பணி இடத்திற்கு அருகில் தற்காலிக இருப்பிடவசதி செய்து கொடுக்கப்படவேண்டும். ஆனால், அவ்வாறு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் தங்கும் இடவசதிகள் பாதுகாப்பு அற்றதாக உள்ளன. மேலும், சிறிய கட்டுமான நிறுவனங்கள் அதற்கான வசதிகளை செய்து கொடுப்பதே இல்லை. இந்த சிரமங்களைப் போக்கிடும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில், 5 இடங்களில் தலா 1,000 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் தலா 500 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும் என மொத்தம் 7,000 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 9 இடங்களில் 105 கோடி ரூபாய் செலவில் தூங்கும் அறைகள் அதாவது Dormitories தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தால் பொதுப்பணித் துறை மூலம் கட்டப்படும். இவைகட்டப்படும் வளாகங்களில் அம்மா உணவகம்,

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சலவைசெய்யும் வசதி, குழந்தைகள் மற்றும் முதியோர் பாதுகாப்பு மையம், வங்கி தொடர்பு சேவை, படிப்பகம், சுகாதார மையம், பொழுதுபோக்கு மையம் ஆகியவை ஏற்படுத்தப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், தொழிலாளர் ஆணையர் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான தங்கும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் தூங்கும் அறைகள் கட்டுதல் தொடர்பான தனது கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு (நிலமதிப்பு நீங்கலாக) கீழ்க்கண்டவாறு:-

| வ.எண் | செலவினம் | தொகை |
|---|---|---|
| 1. | சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 5 இடங்களில் 1000 பேர் தங்கும் வகையில் தூங்கும் அறைகள் கட்ட ஆகும் செலவு ஒரு இடத்திற்கு ரூ.14.40 கோடி என்ற வீதத்தில். | 72 கோடி |
| 2. | சேலம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் தலா ஒரு இடத்தில் 500 பேர் தங்கும் வகையில் தூங்கும் அறைகள் கட்ட ஒரு இடத்திற்கு ரூ.8.50 கோடி என்ற வீதத்தில். | 34 கோடி |
| | **மொத்தம்** | **106 கோடி** |

4. கவனமான பரிசீலினைக்குப்பின்னர், கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான தங்கும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் ரூபாய் 106 கோடி செலவில் தூங்கும் அறைகள் கட்ட தொழிலாளர் ஆணையருக்கு நிர்வாக அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:-

(i) சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், 5 இடங்களில் தலா 1,000 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு இடத்தில் 500 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும் என மொத்தம் 7,000 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 9 இடங்களில் பொதுப் பணித் துறையால் கட்டப்படும். இதற்கான செலவினம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

(ii) தூங்கும் அறைகள் கட்டப்படும் ஒவ்வொரு வளாகத்திலும், அம்மா உணவகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சலவை செய்யும் வசதி, குழந்தைகள் மற்றும் முதியவர்களைப் பாதுகாக்கும் மையம், தானியங்கி பணம் வழங்கும் வங்கி சேவை, படிப்பகம், பொழுது போக்குமையம்,

சுகாதார மையம், கட்டுமான வாரியத்தில் தொழிலாளர்களை பதிவு செய்வதற்கான சேவை மையம், முதியோர் கல்வி வசதி போன்ற வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

(iii) தொழிலாளர் துறை இத்திட்டத்திற்கான நிலத்தை வருவாய்த்துறை அல்லது உள்ளாட்சி அமைப்புகளிடம் பெற்று இப்பணிகளை மேற்கொள்ளும்.

(iv) இத்தங்குமிடங்களுக்கான பராமரிப்புக் கட்டணம் வேலையளிப்போரிடமிருந்து பெறப்படும். மேலும், இங்கு தங்கி இருக்கும் தொழிலாளர்கள் அவர்கள் கட்டுமான பணிசெய்யும் இடங்களுக்கு சென்று வர வேலையளிப்போரால் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மா.வீரசண்முக மணி,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 034.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 009.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–600 009.
மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
பொதுப்பணித்துறை, சென்னை–600 009.
நிதித்துறை, சென்னை – 600 009.
செயலாளரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

இரா.சுந்தரம் 11/12/14
**பிரிவு அலுவலர்.**

11.12.14